# தலைவாசல்

Thalaivaasal

எங்கள் பாரம்பரியம்

வீடு 01 வாசல் 11 | thalaivaasaltv@gmail.com | புதன்கிழமை | ஒக்ரோபர் 07, 2020


## புலமைப்பரிசில், உயர்தர பரீட்சைகள் திட்டமிட்டபடி நடைபெறும்

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையும் க.பொ.த. உயர்தரப் பரீட்சையும் திட்டமிட்டவாறு இடம்பெறும் என கல்வி

03

## முன்னதாகவே ஆடைத் தொழிற்சாலையில் பல பெண்களுக்கு தடிமன், இருமல் இருந்தது

### வெளியானது அதிர்ச்சித் தகவல்

மினுவாங்கொட பிரெண்டிக்ஸ் தொழிற்சாலையில் முதலாவதாக கொவிட்19 தொற்றுடன் அடையாளம் காணப்பட்ட பெண் தற்போது ஐ.டி.எச். மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்று வருகிறார்.

தாம் கொவிட்19 தொற்றுறுடன் அடையாளம் காணப்படுவதற்கு முன்னதாகவே பலர் அங்கு சுகவீனமுற்றிருந்ததாக அந்தப் பெண் தெரிவித்தார்.

எனினும் தொழற்சாலையின் அதிகாரிகள், அதனை சரியாக முகாமை செய்யவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

உண்மையில், இவ்வாறு ஏற்பட்டமை தொடர்பில் தான் அறிந்திருக்கவில்லை என்றும், முன்னதாகவே தொழிற்சாலையில் பல பெண்களுக்கு தடிமன், இருமல

03

## 13 வயது பாலச்சந்திரன் புலிகளின் சிறுவர் படையணியின் பிரதான கட்டளை அதிகாரியாம்

### சரத் பொன்சேகா புதுக் கண்டுபிடிப்பு



தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் மகன் பாலச்சந்திரன், விடுதலைப் புலிகள் அமைப்பின் சிறுவர் படையணியின் பிரதான கட்டளை அதிகாரியாக செயல்பட்டார் என தெரிவித்திருக்கும் முன்னாள் இராணுவ தளபதியும் நாடாளுமன்ற உறுப்பினருமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா பாலச்சந்திரனை இராணுவத்தினர் கொல்லவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று

03

## 72 மணித்தியாலத்தில் 1034 கொரோனா தொற்றாளர்



மினுவாங்கொடை பிரெண்டிக்ஸ் ஆடை தொழிற்சாலையில் கொரோனா தொற்றுக்குள்ளான மேலும் பலர் அடையாளம் காணப்பட்டுவரும் நிலையில் தொழிற்சாலையில் கொரோனா தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை 1034 ஆக அதிகரித்துள்ளது.

03

## தெல்லிப்பளை புற்றுநோய் சிகிச்சை பிரிவை கையகப்படுத்துவதை விடுத்து அரசு நிதி வழங்க வேண்டும்

### கஜேந்திரகுமார் எம்.பி. வேண்டுகோள்



தெல்லிப்பளை புற்றுநோய் சிகிச்சை பிரிவை மத்திய அரசின் நிர்வாகத்தின் கீழ் கொண்டு செல்வது பொருத்தமற்றது எனத் தெரிவித்திருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு முழுமையாக இயங்குதவதற்குத் தேவையான நிதியுதவியினை வழங்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் இது தொடர்பில் உரையாற்றிய அவர் மேலும் குறிப்பிட்ட போது,

கோவிட் 19 வைரஸ் தாக்கத்தினால் இலகுவாகப் பாதிக்கப்படக் கூடியவர்களாக புற்றுநோயாளர்களும் உள்ளனர். கடந்த கால யுத்தம் காரணமாக குண்டுத் தாக்குதல்களினால் ஏற்பட்ட இரசாயன தாக்கங்களினால் புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ள

03

## வெலிசறை பிராண்டிக்ஸ் ஆடைத் தொழிற்சாலை பணியாளருக்கு கோரோனா

வெலிசறை பிராண்டிக்ஸ் ஆடை தொழிற்சாலையின் ஊழியர் ஒருவருக்கு கோரோனா வைரஸ்தொற்று உள்ளமை பி.சி.ஆர் பரிசோதனையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

தொழிற்சாலையில் பணிபுரியும் 93 ஊழியர்களுக்கு இன்று முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனைகளில் ஒருவர் மட்டும் கோரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

## பிறந்தநாள் கொண்டாட்டத்தில் பங்கேற்ற 384 பேர் புங்குடுதீவில் தனிமைப்படுத்தலில்

மினுவாங்கொட ஆடை தொழிற்சாலையில் பணியாற்றிய நிலையில் யாழ்.புங்குடுதீவுக்கு 30ம் திகதி வந்த பெண்ணுடன் பிறந்தநாள் நிகழ்வில் கலந்து கொண்ட 384 பேர் முன்னெச்சரிக்கைநடவடிக்கையாகதனிமைப்படுத்தப்பட்டிருக்கின்றனர்.

03

## வனவளத் திணைக்களத்தினால் அடார்த்தாக காணி எல்லையிடும் முயற்சி முறியடிப்பு

பரந்தன் உமையாள்புரம் பகுதியில் வனவளத் திணைக்களத்தினர் இன்று அடாத்தாக காணி எல்லையிட மேற்கொண்ட முயற்சி முறியடிக்கப்பட்டுள்ளது.

இவ் விடயம் தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனின் கவனத்திற்கு கொண்டு சென்றதை உடனடியாக அவ்விடம் கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் வேழமாலிகிதன் சென்று மக்களுடன் இணைந்து சுவீகரிப்பைத் தடுத்து நிறுத்தியள்ளார்.

மொத்தமாக 344 ஏக்கர் வரையான வீஸ்தீரணமுடைய காணிகளையே வனவளத் திணைக்களத்தினர் சுவீகரிக்கும் முயற்சியில் ஈடுபட்டனர்.

மயானம் நெல்காயவிடும்தளம் பொது மக்களின் வீடுகள் வயல்கள் உள்ளடங்கலாக உள்ள காணிகளையே சுவீகரிக்க முயற்சித்துள்ளனர்.

இவற்றுக்கான காணி அனுமதிப்பத்திரங்கள் மக்களிடம் உள்ள நிலையில் 30 வருடங்களாக வயல்களை விதைத்து வருகின்ற நிலையில் தொடர்ந்து வயலின் விதைத்தால் கைது செய்யப்படுவர் என்றும் வனவளத்திணைக்களத்தினர் அச்சுறுத்தல் விடுத்துள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

**தரணி எங்கும் தமிழராய் இணைவோம்**

## மினுவாங்கொட பகுதியைச் சேர்ந்த

# சுமார் 8,000 பேர் தனிமைப்படுத்தலில்!




மினுவாங்கொட பகுதியைச் சேர்ந்த சுமார் 8 ஆயிரம் பேர் தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இவர்கள் 80 தனிமைப்படுத்தல் நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேநேரம், நேற்று தொற்றுடன் அடையாளம் காணப்பட்டவர்களுடன் தொடர்புகளை பேணியவர்களை கண்டறியும் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதாகவும் இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

தொற்றுக்குள்ளானோருடன் தொடர்புகளை பேணியவர்களையும் தனிமைப்படுத்துவதன் மூலமே சமூகத்தில் மேலும் தொற்று பரவுவதை கட்டுப்படுத்த முடியும் எனவும் இராணுவத் தளபதி குறிப்பிட்டுள்ளார்.

இதேநேரம், மினுவாங்கொடை கொரோனா கொத்தணியை அண்மித்த பகுதிகளில் சுமார் 4,000 பேர் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இவர்கள் தொடர்பாகவும் கண்காணிப்பு நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதாக பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் அறிவித்துள்ளது.




## கம்பஹா மாணவிக்கு காய்ச்சல்: வவுனியா வைத்தியசாலையில் அனுமதி

யாழ் பல்கலைகழக வவுனியா வளாகத்தில் கற்றுவரும் கம்பஹா பகுதியை சேர்ந்த மாணவி ஒருவர் காய்ச்சல் காரணமாக வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த மாணவிக்கு நேற்று (செவ்வாய்க்கிழமை) மாலை காய்ச்சல் ஏற்ப்பட்டுள்ளது. இதனையடுத்து அவர் உடனடியாக வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அவருக்கான பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை கம்பஹா மற்றும் அதனை அண்டிய பகுதிகளைச்சேர்ந்த வவுனியா வளாகத்தில் கல்விகற்றுவரும் 90 மாணவர்களிற்கு நேற்று காலை பிசிஆர் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மேலுமொரு பொலிஸ் பிரிவில் ஊரடங்கு உத்தரவு அமுல்!




சீதுவ பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளுக்கும் பொலிஸ் ஊடரங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காகவே இந்நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கம்பஹா மாவட்டத்தில் ஜா-எல, கந்தான மற்றும் கம்பஹா பொலிஸ் பிரிவு ஆகிய பகுதிகளுக்கு இன்று காலை உடனடியாக அமுலுக்குவரும் வகையில் தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் பிறப்பிக்கப்பட்டது.

இதன்படி கம்பஹா, கிரிந்திவெவல, தொம்பே, பூகொட, கனேமுல்ல, வீரகுல, வெலிவேரிய, மல்வத்துஹிரிபிட்டிய, நிட்டம்புவ, மீரிகம, பல்லேவெல, யக்கல, ஜாஎல மற்றும் கந்தான ஆகிய பொலிஸ் பிரிவுகளுக்கு ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டது.

இதேவேளை, கம்பஹா மாவட்டத்தில் திவுலப்பிட்டிய, மினுவாங்கொட, வெயாங்கொட மற்றும் கம்பஹா ஆகிய பொலிஸ் பிரிவுகளில் ஏற்கனவே ஊரடங்கு உத்தரவு அமுலில் உள்ளது.

இந்த நிலையில், சீதுவ பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளுக்கும் பொலிஸ் ஊடரங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில், கம்பஹா மாவட்டத்தில் 18 பொலிஸ் பிரிவுகளில் ஊரடங்கு உத்தரவு அமுலில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வடக்கில் 6,682 வீடுகளைக் கொண்ட வீட்டுத்திட்டம்



வடக்கில் மன்னார், வவுனியா மற்றும் முல்லைத்தீவு பிரதேசங்களுக்கான 6682 வீடுகளை கொண்ட வீட்டுத்திட்டம் அடுத்த ஆண்டு பூர்த்தியாகும் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

மேலும் இந்த வேலைத்திட்டத்தை அரசாங்கம் முழுமைப்படுத்தி வழங்கும் எனவும் அவர் வாக்குறுதியளித்தார்.

நாடாளுமன்றில் இன்று (புதன் கிழமை) பிரதமர் இடத்திலான கேள்வி நேரத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சார்ல்ஸ் நிர்மலநாதன் எழுப்பிய கேள்விக்கு பதில் கூறுகையிலேயே பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர், "கடந்த ஆட்சிக்காலத்தில் வடக்கிற்கு இந்த வீட்டுத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

எனினும் சில கால தாமதம் ஏற்பட காரணம் என்னவெனில், 2018 ஆம் ஆண்டில் வீடுகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதி 2019 ஆம் ஆண்டுக்கும் 2019 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட நிதி 2020 ஆம் ஆண்டுக்கும் என்ற அடிப்படையில் ஒதுக்கப்பட்டுள்ளது.

எனவே இந்த ஆண்டுக்கென முன்னெடுக்கப்பட்ட வேலைத்திட்டம் 2021 ஆம் ஆண்டில் முழுமையாக பூர்த்தியாகும். எமது அரசாங்கம் அதற்கான நடவடிக்கையை எடுக்கும்" என பிரதமர் இதன்போது கூறினார்.

## இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட கழிவு கலன்கள்: இழப்பீடு கோருகிறது அரசாங்கம்

பிரித்தானியாவில் இருந்து 263 கழிவுகள் அடங்கிய கொள்கலன்களை இறக்குமதி செய்வதன் மூலம் ஏற்பட்ட பாதிப்புக்கு இலங்கை அரசாங்கம் 1.69 பில்லியன் ரூபாய் இழப்பீட்டு கோரியுள்ளது.

Basel சாசனத்தின் கீழ் இலங்கை வழக்கு தாக்கல் செய்துள்ளது என சுற்றுச்சூழல் அமைச்சு அறிக்கை ஒன்றினை வெளியிட்டு இந்த விடயம் தொடர்பாக தெரிவித்துள்ளது.

கழிவுகள் அடங்கிய கொள்கலன்கள் பிரித்தானியாவில் இருந்து 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் சட்டவிரோதமாக நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்டன.

130 கொள்கலன்கள் கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்திலும், 133 கொள்கலன்ள் கொழும்பு துறைமுகத்தின் ஒரு பகுதியிலும் வைக்கப்பட்டன.

21 கொள்கலன்கள் இதுவரை பிரித்தானியாவிற்கு திருப்பி அனுப்பட்டுள்ள நிலையில் மேலதிக விசாரணைகள் முடிந்ததைத் தொடர்ந்து மீதமுள்ள கொள்கலன்கள் திருப்பியனுப்படும் செய்யப்படும் என சுற்றுச்சூழல் அமைச்சு தெரிவித்துள்ளது.

# பொருட்களுக்கு செயற்கை தட்டுப்பாட்டை ஏற்படுத்த வேண்டாம்

யாழ்ப்பாணத்தில் போதியளவு அத்தியாவசியப் பொருட்கள் கையிருப்பில் உள்ளதாக தெரிவித்துள்ள யாழ்ப்பாண வணிகர் கழகம், பொதுமக்கள் தேவையற்ற வகையில் பொருட்களை கொள்வனவு செய்து செயற்கை தட்டுப்பாட்டை ஏற்படுத்த வேண்டாம் என வேண்டுகோள் விடுத்துள்ளது.

கொரோனா அச்சம் காரணமாக மக்கள் கூட்டம் கடைகளில் அலைமோதிவரும் நிலையில் யாழ்ப்பாண வணிகர் கழகம் இத் தகவலை வெளியிட்டுள்ளது.

# ஆதிலிங்கேஸ்வரர் ஆலயம் சென்றால் கைது செய்வோம்!

## மிரட்டுகிறது பொலிஸ்

நெடுங்கேணி வெடுக்குநாறி மலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தினை முடக்கும் நோக்கில் வனப்பகுதி ஊடாக பக்தர்கள் மற்றும் மதகுருக்களை செல்ல இலங்கை பொலிஸ் தடை விதித்துள்ளது.

முன்னதாக நீதிமன்றம் ஆலயத்தில் பூசை மேற்கொள்ள முடியும் என் கட்டளை பிறப்பித்த நிலையிலும் பூசகர் மற்றும் ஆலய நிர்வாகத்தினரை அழைத்த இலங்கை பொலிஸார் ஆலயத்திற்கு சென்றால் கைது செய்வோம் என அச்சுறுத்தல் விடுத்துள்ளனர்.

முன்னதாக ஆலயத்திற்கு செல்லவோ பூசை வழிபாடுகளை மேற்கொள்ள முடியாது என தொல்லியல் திணைக்களத்தினர் மிரட்டி வந்திருந்தனர். இதன் தொடர்ச்சியாக இலங்கை பொலிஸார் வவுனியா நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்த நிலையில் வழிபாட்டிற்கான அனுமதியை நீதிமன்றம் உறுதிப்படுத்தியிருந்தது.

அதனையடுத்து மிகப்பெருமெடுப்பில் இவ்வாண்டிற்கான வருடாந்த பொங்கல் நிகழ்வு முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இந்நிலையிலேயே நேற்று முன்தினம் பூசகர் மற்றும் ஆலய நிர்வாகத்தினரை அழைத்த நெடுங்கேணி பொலிஸார் ஆலயத்திற்கு சென்றால் கைது செய்வோம் என அச்சுறுத்தல் விடுத்துள்ளனர்.

# வழக்கு விசாரணைகளுக்கான மாற்று திகதிகளை அறிவிக்க உத்தரவு

ஊரடங்கு உத்தரவு விதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் உள்ள நீதிமன்றங்களில் வழக்கு விசாரணைகளுக்கான மாற்று திகதிகளை வழங்க நீதிச் சேவை ஆணைக்குழு உத்தரவு பிறப்பித்துள்ளது.

அரசாங்க தகவல் திணைக்களம் இன்று (புதன்கிழமை) இந்த விடயத்தை அறிவித்துள்ளது.

அத்தோடு வழக்குகளுக்கான மாற்று திகதிகளை நீதிமன்ற அறிவித்தல் பலகையில் பிரசுரிக்குமாறும் நீதிச் சேவை ஆணைக்குழு அறிவுறுத்தியுள்ளது.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## முன்னதாகவே...

இருந்ததுடன், மயக்கமடைந்தும் விழுந்ததாக அந்தப் பெண் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், நெஞ்சு வலியின் காரணமாக தான் சிகிச்சைக்காக சென்றமையினால், தன்னை அனைவரும் காப்பற்றியதாக குறித்த பெண் தெரிவித்துள்ளார்.

தொழிற்சாலையில் முன்னதாக இருந்த முகாமைத்துவம் தொடர்பில் தான் மிகவும் மகிழ்ச்சியடைவதாகவும், ஆனால், தற்போதைய முகாமைத்துவம் குறித்து தான் மிகவும் கவலையடைவதாகவும் அந்தப் பெண் கூறியுள்ளார்.

முன்னதாக இருந்த அதிகாரிகள், தடிமன் ஏற்பட்டதும், அது குறித்து ஆராய்ந்து பார்த்தனர்.

ஆனால், தற்போதைய முகாமைத்துவம் தொடர்பில் தான் கவலை அடைவதாகவும் அந்தப் பெண் தெரிவித்துள்ளார்.

முதலாவதாக காய்ச்சல் வந்த நோயாளி தான் அல்ல என்றும், அதற்கு முன்னரே காய்ச்சல் மற்றும் மயக்கமடைந்த பலர் இருந்ததாகவும் அவர் கூறியுள்ளார்.

ஒரு மாதமாக பணிக்கு சென்று இறுதி தினத்தில்தான் தனக்கு இவ்வாறு நடந்ததாக மினுவாங்கொடை பிறெண்டிக்ஸ் ஆடைத் தொழிற்சாலையில் முதலாவதாக கொவிட்-19 தொற்றுறுதியான பெண் குறிப்பிட்டார்.

## 72 மணித்தியாலத்தில்...

அந்த ஆடைத் தொழிற்சாலையில் மேலும் 190 ஊழியர்களுக்கு இன்று பிற்பகல் கொவிட்-19 தொற்று உறுதியானதாக இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் ஷவேந்திர சில்வா தெரிவித்தார்.

இந்த நிலையில் மொத்தமாக ஆயிரத்து 34 பேருக்கு கொவிட் 19 தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி சவேந்திரசில்வா தெரிவித்துள்ளார்.

## தெல்லிப்பளை...

வர்களின் எண்ணிக்கை வட மாகாணத்தில் மிக அதிகமாக உள்ளது.

அவ்வாறு புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சையளிக்கும் நிலையமாக உள்ள தெல்லிப்பளை புற்றுநோய் வைத்தியசாலை தொடர்பில் குறிப்பிட விரும்புகின்றேன்.

தெல்லிப்பளை வைத்தியசாலையில் புற்றுநோய் பிரிவை உருவாக்குவதற்கு எனது குடும்பத்தின் பங்களிப்பு கூடுதலாக இருந்தது. புற்றுநோய் பிரிவுக்குரிய கட்டடம் மற்றும் அதற்குரிய கோபோல்ற் இயந்திரத்தினையும் எமது குடும்பம் வழங்கியிருந்தது.

குறித்த புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு யுத்தத்தின் முன்னரும், பின்னரும் யாழ்ப்பாணம் மற்றும் வடக்கு மாகாணத்தில் மட்டுமல்ல அதற்கு அப்பாலுள்ள மக்களும் சிகிச்சை பெறும் நிலையமாக விளங்கியது. மகரகம போன்ற தொலை தூரங்களிலுள்ள வைத்தியசாலைகளுக்குச் செல்ல வசதியற்ற பெருந்தொகையான நோயாளர்களுக்கு சிகிச்சையளிக்கும் சேவையை இந்த வைத்தியசாலை வழங்கி வந்துள்ளது.

இந்த நிலையில் மாகாண சபையின் கீழ் இயங்கும் இந்த புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு முழுமையாக இயங்குதவதற்குத் தேவையான ஆளணிவளம் 2018 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. ஆனாலும் அந்தப் பதவிகளுக்கான ஆட்கள் நியமிக்கப்படவில்லை. மாறாக மத்திய அரசின் கீழ் இயங்கும் யாழ் போதனா வைத்தியசாலைக்கு அந்த ஆளணியை நியமித்து அவர்களை தெல்லிப்பளை புற்றுநோய் சிகிச்சைப் பிரிவில் பணியாற்ற அனுமதித்தனர். இச் செயற்பாட்டின் காரணமாக மத்திய அரசின் கீழ் கடமையாற்றும் வைத்திய அதிகாரிகள் மாகாண அமைச்சின் கீழ் இயங்கும் வைத்தியசாலையில் வேலை செய்யும் நிலை ஏற்பட்டது. இதனால் குழப்ப நிலைகள் உருவாகியது. இவ்வாறான முரண்பாடுகளால் நோயாளர்கள் மோசமாகப் பாதிக்கப்படும் நிலை தொடர்கின்றது.

இது மட்டுமன்றி தெல்லிப்பளை வைத்தியசாலையில் கோபோல்ற் இயந்திரம் மற்றும் லீனியர் அச்சிலறேற்ரர் இயந்திரம் ஆகியன உள்ளன. அதனால் ஏனைய மாகாணங்களிலுள்ள மாகாண புற்றுநோய் வைத்தியசாலைகளை விடவும் கூடுதலான நிதிச் செலவு ஏற்படுகின்றது. எனினும் அந்த நிதித் தேவையை மாகாண அரசினால் ஈடுசெய்ய முடியாதுள்ளது. மாகாண அரசின் கீழுள்ள இந்த வைத்தியசாலைக்குத் தேவையான செலவுகளை ஈடுசெய்வதற்குத் தேவையான நிதியை மத்திய அரசு வழங்குவதில்லை.

ஒரு புறத்தில் மாகாண நிர்வாகத்தின் கீழுள்ள மேற்படி புற்றுநோய் சிகிச்சை பிரிவை நிர்வகிப்பதற்குத் தேவையான நிதியை வழங்காது மறுபுறத்தில் இந்த அந்தப் பிரிவை மத்திய அரசின் கீழ் கொண்டு வந்தால் அதனை அபிவிருத்தி செய்ய முடியும் என்று கூறி அதனை மத்தியின் கீழ் கொண்டு செல்ல அரசு முயற்சிக்கின்றது.

ஆனால் இந்த புற்றுநோய் சிகிச்சை பிரிவை மத்திய அரசின் நிர்வாகத்தின் கீழ் கொண்டு செல்வது பொருத்தமற்றது.

குறிப்பாக புற்றுநோய் சிகிச்சைப் பிரிவையும், உளநல சிகிச்சைப் பிரிவையும் மத்தியின் கீழ் கொண்டு செல்வதற்கு அரசு முயற்சிக்கின்றது. இவ்வாறு இவை இரண்டையும் மத்தியின் கீழ கொண்டு செல்வதன் மூலம் நிர்வாக ரீதியான சிக்கல்கள் மேலும் உக்கிரமடையும். எனவே அநாவசியமான பிரச்சினைகளை உருவாக்காமல் அதுவும் கோவிட் 19 வைரஸ் நெருக்கடியுள்ள இக்கால கட்டத்தில் புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ளவர்களின் நலன்களை கருத்திற் கொண்டு குறித்த புற்றுநோய் சிகிச்சைப் பிரிவானது தொடர்ந்தும் மாகாண நிர்வாகத்தின் கீழ் இருக்கக் கூடியதாக அதற்குத் தேவையான ஆளணி மற்றும் நிதி வசதிகளை வழங்கி அதன் சேவையை மேம்படுத்த அரசு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கின்றேன்- என்றார்.

## பிறந்தநாள்...

மினுவாங்கொட ஆடை தொழிற்சாலையில் பணியாற்றிய நிலையில் யாழ்.புங்குடுதீவுக்கு வந்திருந்த இரு பெண்களில் ஒரு பெண் கொரோனா தொற்றுக்குள்ளானார். இதேவேளை மற்றய பெண் தொடர்ந்தும் தனிமைப்படுத்தலில் இருந்து வருகின்றார்.

இந்நிலையில் தனிமைப்படுத்தலில் உள்ள பெண் பிறந்தநாள் நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டிருந்த நிலையில் அவருடன் அந்த நிகழ்வில் கலந்துகொண்டிருந்த 384 பேர் இன்று தனிமைப்படுத்தப்பட்டிருக்கின்றனர். ஒரு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## புலமைப்பரிசில்...

அமைச்சர், பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்தார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் இன்று (07) இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின்போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

குறித்த இரு பரீட்சைகளும் திட்டமிட்டவாறு சுகாதார பிரிவின் வழிகாட்டல்களுக்கு அமைய இடம்பெறும் எனவும், அவர் தெரிவித்தார்.

கம்பஹா மாவட்டத்திலுள்ள மாணவர்களுக்கும் கம்பஹா மாவட்டத்தில் பரீட்சைகளுக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கும் விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை எதிர்வரும் 11ஆம் திகதி இடம்பெறவுள்ளதோடு, க.பொ.த. உயர்தரப் பரீட்சை எதிர்வரும் 12ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

## 13 வயது பாலச்சந்திரன்...

செவ்வாய்க்கிழமை உரையாற்றிய அவர் உறுப்பினர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதில் அளித்தபோது இந்த கருத்தை வெளியிட்டுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் இளைய மகன் பாலச்சந்திரனிற்கு உணவு, தண்ணீர் வழங்கி, அவரை இலங்கை இராணுவமே சுட்டுக் கொலை செய்ததாக நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.கஜேந்திரன் நாடாளுமன்றத்தில் குற்றம்சாட்டினார்.

இதனையடுத்து கஜேந்திரனின் கருத்துக்கு எதிர்ப்பை வெளியிட்ட சபையிலிருந்த ஆளும் கட்சி உறுப்பினர்கள் பலர் கஜேந்திரனின் கருத்து உண்மைக்குப் புறம்பானது எனவும், அதனை ஹன்சார்ட் பதிவிலிருந்து நீக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதையடுத்து, ஒழுங்கு பிரச்சனையை எழுப்பிய நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேனா, பாலச்சந்திரன் கூட பயங்கரவாத செயற்பாடுகளில் ஈடுபட்டதாக தெரிவித்தார்.

பிரபாகரனின் மகன் பாலச்சந்திரன், விடுதலைப் புலிகள் அமைப்பின் சிறுவர் படையணியின் பிரதான கட்டளை அதிகாரியாக செயல்பட்டார் எனவும் சரத் பொன்சேகா கூறினார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன், இராணுவ சீருடையில் இராணுவ படையை வழிநடத்தியதாகவும், பிரபாகரனின் மனைவி புலிகளின் விநியோக பிரிவிற்கு பொறுப்பானவராக செயல்பட்டதாகவும் சரத் பொன்சேனா குறிப்பிட்டார்.

அத்துடன், பிரபாகரனின் மூத்த மகன் அந்த அமைப்பின் கேர்ணலாக செயல்பட்டதுடன், அவரது மகள் பயங்கரவாத அமைப்பின் பெண்கள் பிரிவில் மேஜராக செயற்பட்டார் எனவும் தெரிவித்துள்ளார்.

பிரபாகரனின் இளைய மகன் பதுங்கு குழியொன்றில் இருப்பதை போன்றதொரு புகைப்படத்தையே தாம் பின்னர் அவதானித்ததாகவும், தமிழர்கள் அணியும் சாரத்தை போன்றதொரு உடையை அவர் அணிந்திருந்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், குறித்த சிறுவன் இராணுவத்திடம் கிடைத்திருந்தால், சாரம் அணிய சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருக்காது என்பதுடன், அவர் சேர்ட் மற்றும் காற்சட்டை அணிந்திருந்திருப்பார் எனவும் அவர் குறிப்பிட்டார்.

# இலங்கையில் 3 இலட்சத்தை அண்மிக்கும் பி.சி.ஆர் பரிசோதனை

இலங்கையில் இதுவரையில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனைகளின் எண்ணிக்கை 3 இலட்சத்தை அண்மித்துள்ளது.

அதற்கமைய நாட்டில் இதுவரையில் 2 இலட்சத்து 98 ஆயிரத்து 501 பேருக்கு பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கம்பஹா - மினுவங்கொடை ஆடைத் தொழிற்சாலையில் பணியாற்றிய பெண்ணுக்கு கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை கடந்த 4ஆம் திகதி உறுதி செய்யப்பட்டது.

இதனையடுத்து, அவரின் உறவினர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் அவரது மகளுக்கும் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டது.




மேலும் அவருடன் தொழில் புரிந்த நாட்டின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்தவர்களுக்கும் தொற்று உள்ளமை உறுதி செய்யப்பட்டது.

இதனையடுத்து, தொற்றுக்குள்ளான பெண்ணுடன் தொடர்புடையவர்கள் மற்றும் அவரது மகளுடன் தொடர்பில் இருந்தவர்கள் என பலருக்கு நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

அத்தோடு, வெளிநாடுகளில் இருந்து நாடு திரும்பியவர்களுக்கும் பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம் விடுத்துள்ள முக்கிய அறிவிப்பு!




கொரோனா தொற்று பரவுவதைத் தடுக்கும் நடவடிக்கையாக குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் பிரதான மற்றும் பிராந்திய அலுவலகங்களுக்கு வருகை தருவதற்கு பொதுமக்களுக்கு தற்காலிக மாக தடை விதிக்கப்பட்டுள்ளது.

அதன்படி ஒக்டோபர் மாதம் 07, 08, 09 ஆம் திகதிகளில் பொது மக்கள் சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்காக வருகை தருவது தற்காலிகமாக இடைநிறுத்தப்படுகின்றது என அத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் நாயகம் அறிவித்துள்ளார்.

குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்திடமிருந்து சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்காக, அலுவலக நேரங்களில் (மு.ப. 8.00 மணி தொடக்கம் பி.ப. 4.30 வரை) கீழ்க் காணும் தொலைபேசி இலக்கங்களூடாக அல்லது மின்னஞ்சல் ஊடாக உரிய பிரிவுடன் தொடர்பு கொண்டு, உரிய ஏற்பாடுகளைச் செய்து கொள்ளுமாறு பொது மக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளார்.

# கொரோனா தொற்று தொடர்பாக மக்கள் அச்சமடையத் தேவையில்லை



கொரோனா தொற்றின் சமீபத்தைய பரவல் தொடர்பாக மக்கள் அச்சமடையத் தேவையில்லை என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பொறுப்புடனும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்றும் சுகாதார அமைச்சின் வழிகாட்டுதல்களை பின்பற்ற வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

இது தொடர்பாக டுவிட்டரில் பதிவொன்றினை பகிர்ந்துள்ள பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, இந்த தொற்றினைக் கட்டுப்படுத்த சுகாதார அதிகாரிகள், அரசாங்கம், பொலிஸார் மற்றும் முப்படையினர் செயற்பட்டு வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

# ஆப்கான் கிரிக்கெட் வீரர் கார் விபத்தில் மரணம்!





ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரரான நஜீப் தாராகை (Najeeb Tarakai) கார் விபத்தில் உயிரிழந்துள்ளார்.

ஜலாலாபாத்தில் கிழக்கு நங்கர்ஹாரில் வீதியைக் கடக்கும்போது கார் மோதியதில், படுகாயங்களுக்குள்ளான அவர், தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

காபூல் அல்லது அண்டை நாடுகளின் மருத்துவமனைகளுக்கு மாற்றுவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுப்பட்டிருந்த நிலையில், அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

அவரது இழப்பிற்கு ஆப்கான் கிரிக்கெட் வீரர்கள், உள்ளூர் இரசிகர்கள், பிரபல முன்னாள் மற்றும் இன்னாள் வீரர்கள் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

29 வயதான ஆரம்ப துடுப்பாட்ட வீரர் நஜீப் தாராகை, இதுவரை ஒரு ஒரு நாள் போட்டியிலும், 20 ரி-20 போட்டிகளிலும் விளையாடியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் அறிவிப்பு




மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தினால் வழங்கப்படும் பொது மக்கள் சேவைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன.

அதன்படி, இன்று (07) மற்றும் 8, 9 ஆம் திகதிகளில் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் நாரஹேன்பிட்டி அலுவலகம் மற்றும் வேரஹெர அலுவலகம் பொதுமக்களுக்காக திறக்கப்பட மாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இதன் காரணமாக பொது மக்கள் ஏதேனும் சிரமங்களுக்கு உள்ளாவது தொடர்பாக வருந்துவதாக மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் நாயகம் சி.கே. அழகக்கோண் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

# ஆடைத் தொழிற்சாலை ஊழியர்கள் வெளியில் நடமாடவேண்டாம்

ஆடைத் தொழிற்சாலையில் பணிபுரியும் ஊழியர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் அனைவரும் நாட்டின் எந்தப் பகுதியில் இருந்தாலும் வெளியில் நடமாட வேண்டாம் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக அரசாங்க தகவல் திணைக்களம் அறிக்கையொன்றினை வெளியிட்டுள்ளதுடன் அவர்கள் அனைவரையும் தங்களது வீடுகளில் சுய தனிமைப்படுத்தலில் இருக்குமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

இதேவேளை மறுஅறிவித்தல் வரும் வரை கம்பஹாவிலிருந்து வெயங்கொட வரை எந்த நிலையத்திலும் புகையிரதங்கள் நிறுத்தப்படாது என புகையிரத திணைக்களம் அறிவித்துள்ளது.

# மராட்டியத்தில் மேலும் 104 பொலிஸாருக்கு கொரோனா

இந்தியாவில் மராட்டியத்தில்தான் கொரோனா வைரஸ் தொற்றின் பாதிப்பு அதிகளவில் பதிவாகியுள்ளது.

மேலும் குறித்த மாநிலத்தில் பொலிஸாரும் அதிகளவில் தொற்றால் பாதிக்கப்பட்டு வருகின்றனர். இந்நிலையில் கடந்த 24 மணி நேரத்தில் மாநிலம் முழுவதும், 104 பொலிஸாருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனால் இதுவரை, மாநிலத்தில் பாதிக்கப்பட்ட பொலிஸாரின் மொத்த எண்ணிக்கை 24,254 ஆக உயர்ந்து உள்ளது. இதில் 21,423 பேர் குணமடைந்துவிட்டனர். தற்போது 2,578 பேர் கொரோனா பாதிப்புக்கு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதேவேளை புதிதாக 2 பொலிஸார், கொரோனா வைரஸ் தொற்றினால் உயிரிழந்துள்ளமையினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 253 ஆக உயர்வடைந்துள்ளது.

இதேபோல இதுவரை ஊரடங்கை மீறியது தொடர்பாக 2 இலட்சத்து 77 ஆயிரத்து 281 வழக்குகளை பொலிஸார் பதிவு செய்துள்ளனர். இது தொடர்பாக 39,666 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் ஊரடங்கை மீறியவர்களிடம் இருந்து 29 கோடியே 99 இலட்சம் ரூபாய் அபராதம் வசூலிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.